விலை: 50.00
பக்கங்கள் - 16


Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 126 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 11 வியாழக்கிழமை (24.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



மும்பை வெற்றி

பக்கம் 4

# கொலைக் கலாசாரம் தலைதூக்கியுள்ளது

## அரசு ஏன் மௌனம் காக்கின்றது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

(கொழும்பு)

நாட்டில் கொலைக் கலாசாரம் தலைதூக்கியுள்ளது. இதனைத் தடுக்க முடியாமல் ஏன் அரசாங்கம் மௌனம் காக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி எழுப்பியுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



## 26ஆம் திகதி

## ஜனாதிபதி வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வவுனியாவிற்கு விஜயம் மேற்கொள்ள

15ஆம் பக்கம் பார்க்க

## புதுக்குடியிருப்பில்

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பகுதியில் கசிப்பு

15ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்காவுடன் தீர்வை வரி குறித்து கலந்துரையாடல் வெற்றி ; விரைவில் கூட்டறிக்கை

### ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

(இரத்தினபுரி)

அமெரிக்காவுடனான தீர்வை வரி குறித்த பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்துள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான முடிவுகள் விரைவில் கூட்டு அறிக்கையில் அறிவிக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற அரசியல் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க



## மூளையில் கிருமித் தொற்று இளம் குடும்பஸ்தர் மரணம்

### துன்னாலையில் சம்பவம்

(கரணவாய்)

மூளையில் ஏற்பட்ட கிருமித் தொற்றுக் காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த மணியம் ஜெகதீஸ்வரன் (வயது-34) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் திடீர் உடல்நலக்குறைவு காரணமாக நேற்றுப் புதன்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு

15ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சித் தேர்தல்

## தபால்மூலமான வாக்களிப்பு இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால்மூலமான வாக்களிப்பு இன்று, நாளை மற்றும் எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் மே 6ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயார் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-7,4)

## இந்த ஆண்டில் இதுவரை

## 37 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்

### 26 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் (22) வரையிலான காலப் பகுதியில் நாடு முழுவதும் 37 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

துப்பாக்கிச் சூட்டில் 26 பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த 37 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 23 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களால் நடத்தப்பட்டவை எனத் தெரியவந்துள்ளது.

தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக மீதமுள்ள 14 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,4)

## பெரமுன வேட்பாளர் டான் பிரியசாத் கொலை



### சந்தேகத்தில் மூவர் கைது

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் டான் பிரியசாத் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ள

15ஆம் பக்கம் பார்க்க

## காஷ்மீரில் பயங்கரவாதிகள் தாக்குதல்

### 26 பேர் உயிரிழப்பு



08ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச மற்றும் நகர சபைகள்

## ஊழல் அரசியலின் பாலர் பாடசாலைகள்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

ஒவ்வொரு அமைச்சுக்கும் வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை மக்களின் நலனுக்காகத் திட்டமிட்ட முறையில்

15ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறா நல்வெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகரசபைத் தேர்தல்

எண்ணிம செயற்திட்டங்களுடன்

## " தூயகரங்கள் - தூயநகரம் "


02ம் வட்டாரம் - கந்தர்மடம் வடமேற்கு J/100, 102, 123(பகுதி)



வேட்பாளர்

**இராசநாயகம் ரவிசங்கரன்**


மென்பொருள் பொறியியலாளர்
சட்டத்துறை மாணவன்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
077 678 2336




வேட்பாளர்

**சங்கரப்பிள்ளை சிவலோகேசன்**


தொழிலதிபர்,
செயலாளர், யாழ் வணிகர் கழகம்
077 308 6894





X





**அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்**
**தமிழ்த் தேசியப் பேரவை**

(C-2788)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/ புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றி வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள

**திரு. சிவபாதசுந்தரம் சிவகுமார்**

B.A(Hons), PGDE, M.A(Tamil), M.A(Culture), M.Ed, PGDISNE(NIE), PGDISNE (OUSL), DSM, PGDEM

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(4001)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம்

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கு.நாகராசா



தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையத்தின் அங்கத்தவரும், கடந்த காலங்களில் நிர்வாக சபை உறுப்பினரும், ஓய்வு நிலை கணித ஆசானுமாகிய

**அமரர் கு.நாகராசா**


அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்கின்றோம்.

தேசிய வெளிக்கள நிலையம்,
தொண்டைமானாறு

(C-2786)

# மரண அறிவித்தல்

மலர்வு
25 - 06 - 1950



உதிர்வு
19 - 04 - 2025

## திரு. சீனிவாசகம் சோதிநாதன்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி, சோஸ்ற்ரை (Soest) வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சீனிவாசகம் சோதிநாதன் அவர்கள் கடந்த 19.04.2025 அன்று காலமானார்.

அன்னார் சீனிவாசகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மகனும் வேலாயுதபிள்ளை - தவமணி (ஏழாலை தெற்கு) தம்பதியினரின் மருமகனும் ராகினிதேவியின் அன்புக் கணவரும் சுதாகினி, நிஜந்தினி, சிறீனிவாசன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அருள்வரதன், சாஜினி ஆகியோரின் மாமனாரும் நிலக்ஷனா, கீறித்திகா, திரிசியா, லியோனாஇசை ஆகியோரின் பாட்டனாரும் காலஞ்சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற குமாரகுலசிங்கம், சந்திரவதனி, காலஞ்சென்ற சுகிர்தாம்பிகை, சகுந்தலாதேவி, கமலநாயகி, ரவீந்திரநாதன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை 25.04.2025 வெள்ளிக் கிழமை Soest, Germanyயில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
ராகினி (மனைவி) : 0049 1735633907
சிறீனிவாசன் (மகன்) : 0041 782180005
அருள்வரதன் (மருமகன்) : 0049 176 64914397
சுசீலாதேவி (மைத்துனி- ஏழாலை தெற்கு) : 0094 771629930
ஜெயகாந்தன் (மருமகன்) : 0094 774431851

தகவல்:
குடும்பத்தினர்

(4004)

# மரண அறிவித்தல்

பிறப்பு
04 - 04 - 1952



இறப்பு
23 - 04 - 2025

## நடராசா ஜெயராணி

யாழ்.உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஜெயராணி அவர்கள் நேற்று (23.04.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா நடராசா அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கரத்தினம் தம்பதியரின் அன்புப் புதல்வியும் கந்தையா - சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும் பத்மராணி, தங்கராணி, இந்திராணி, காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் கமலராணி, யோகராணி, சிவராணி, ஆனந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயராஜ் (அதிபர் - பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலை), ஜெயமோகன் (உதவி முகாமையாளர் - BOC தலைமையகம்), சாந்தி (அரச கால்நடை வைத்தியர் - கரவெட்டி), ஜெயப்பிரியன் (ஆசிரியர் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுபாமதி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நல்லூர்), ரட்ஷிதா (முகாமையாளர் - மக்கள் வங்கி, கொள்ளுப்பிட்டி), சசிமாறன் (அரச கால்நடை வைத்தியர் - நல்லூர்), சரணி (முகாமைத்துவ உதவியாளர் - யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சதுர்த்திகன், சந்தோஷ், அக்ஷாயினி, கனிஸ்ஹாயினி, சருக்சயன், ஷய்பிரவின், சிந்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2025) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 346 6121, 077 422 4522,
077 785 3322, 077 973 3764

(4005)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை – இந்திய ஒப்பந்தம்

# இந்தியாவின் அனுமதியின்றி வெளியிட முடியாது

## அநுர அரசு அறிவிப்பு



**(கொழும்பு)**

**இந்தியாவுடன் கையெழுத்திடப்பட்ட ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்றும், சில தகவல்களை வெளியிட இரு தரப்பினரின் ஒப்புதல் தேவைப்படுவதால் சிறிது காலம் எடுக்கும் என்றும் அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று முன்தினம் தெரிவித்தார்.**

வாராந்திர அமைச்சரவை மாநாட்டில், அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் மட்டுமே கையெழுத்திட்டுள்ளதாகவும், அவை தொடர்பான அனைத்து தகவல்களையும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ் சீனக் கப்பல்கள் இலங்கை கடல் பகுதியில் அனுமதிக்கப்படாது என்பதனை அரசாங்கம் ஒப்புக் கொண்டதா என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்களை அவசரமாக யாராவது கேட்டால், அவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைத் தாக்கல் செய்து தகவல்களைப் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் ஒப்புதலுடனும், தொடர்புடைய அமைச்சகங்களுடன் விரிவான கலந்துரையாடலுக்குப் பிறகும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-8)

## இலங்கையின் ஏற்றுமதி அதிகரிப்பு



(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி 5.87% அதிகரித்து 4.2 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளது.

சேவைகள் ஏற்றுமதி 10.88% அதிகரித்து 887.04 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

பொருட்கள் ஏற்றுமதி 4.61% அதிகரித்து 3.32 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. (நி-8)

## முட்டை விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சந்தையில் முட்டை விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அதன்படி 23 ரூபாய் முதல் 29 ரூபாய் வரை முட்டை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனினும் புத்தாண்டு காலத்தில் அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யப்பட்டது.

இதன்போது 47 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் முட்டை விற்பனை செய்யப்பட்டது.

தற்போது முட்டைக்கான கேள்வி குறைவடைந்துள்ளமையின் காரணமாக முட்டை விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

அன்பர்கள்,நண்பர்கள்,வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது நிறுவனத்தின் ஓராண்டு நிறைவில் மனமார்ந்த நன்றிகள்




No.92 Stanley Road Jaffna. TP.021 222 5105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரோகித், போல்ட் அசத்தல்

# 'சத்தான' சன்ரைசர்ஸை 'முத்தாக' வென்றது மும்பை




ரோகித் சர்மா அரைச்சதம் கடந்து கைகொடுக்க மும்பை அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹைதராபாத்தில் நடந்த இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் ஐதராபாத் - மும்பை அணிகள் மோதின. மும்பை "லெவன்" அணியில் அஷ்வனி குமாருக்குப் பதிலாக விக்னேஷ் தேர்வானார்.

ஹைதராபாத் "லெவன்" அணியில் ஜெயதேவ் உனத்கட் இடம் பெற்றார். "டாஸ்" வென்ற மும்பை அணி கேப்டன் ஹர்திக் பாண்ட்யா, பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**கிளாசன் அரைசதம்:**

ஹைதராபாத் அணிக்கு டிராவிஸ் ஹெட் (0), இஷான் கிஷான் (1), அபிஷேக் சர்மா (8), நிதிஷ் குமார் ரெட்டி (2) ஏமாற்றினர். ஹைதராபாத் அணி 4.1 ஓவர்களில் 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.



அனிகேத் வர்மா (12) நிலைக்கவில்லை. விக்னேஷ் வீசிய 10வது ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி விரட்டிய கிளாசன், ஹர்திக் பாண்ட்யா வீசிய 11வது ஓவரில் 3 பவுண்டரி அடித்தார். போல்ட் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய கிளாசன், 34 பந்துகளில் அரைச்சதம் எட்டினார்.

**மனோகர் ஆறுதல்:**

பொறுப்பாக ஆடிய அபினவ் மனோகர், பாண்ட்யா வீசிய 18வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்தார். ஆறாவது விக்கெட்டுக்காக 99 ஓட்டங்கள் சேர்த்த போது பும்ரா "வேகத்தில்" கிளாசன் (71 ஓட்., 2 சிக்சர், 9 பவுண்டரி) ஆட்டமிழந்தார். போல்ட் வீசிய கடைசி ஓவரில் அபினவ் மனோகர் (43 ஓட்., 3 சிக்சர், 2 பவுண்டரி), அணித் தலைவர் கம்மின்ஸ் (1) ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் ஹைதராபாத் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களை எடுத்தது. ஹர்ஷல் படேல் (1) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் போல்ட் 26 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

**ரோகித் அபாரம்:**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு ரிக்கிள்டன் (11) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். பின் இணைந்த ரோகித் சர்மா, வில் ஜாக்ஸ் ஜோடி நம்பிக்கை கொடுத்தது. கம்மின்ஸ் வீசிய 3வது ஓவரில் இருவரும் தலா ஒரு சிக்சர் விளாச, 17 ஓட்டங்கள் கிடைத்தன. ஈஷான் மலிங்க வீசிய 6வது ஓவரில் 2 பவுண்டரிகள் அடித்தார் ஜாக்ஸ். மறுமுனையில் அசத்திய ரோகித், உனத்கட், ஜீஷான் அன்சாரி பந்தில் தலா ஒரு சிக்சர் பறக்கவிட்டார். இரண்டாவது விக்கெட்டுக்காக 64 ஓட்டங்கள் சேர்த்த போது அன்சாரி பந்தில் ஜாக்ஸ் (22) அவுட்டானார்.

**சுப்பர் சூர்யா**

கம்மின்ஸ் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரோகித், 35 பந்துகளில் அரைச்சதம்எட்டினார். அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ், அன்சாரி வீசிய 12வது ஓவரில் 2 பவுண்டரி விளாசினார். ஹர்ஷல் படேல் வீசிய 14வது ஓவரில் 3 பவுண்டரிகள் விரட்டிய ரோகித், 70 ஓட்டங்களில் (3 சிக்சர், 8 பவுண்டரி) ஆட்டமிழந்தார். ஈஷான் மலிங்க ஓவரில் 2 சிக்சர் விளாசிய சூர்யகுமார், அன்சாரி பந்தை பவுண்டரிக்கு அனுப்பி வெற்றியை உறுதி செய்தார்.

மும்பை அணி 15.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 146 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. சூர்யகுமார் (40), திலக் வர்மா (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை டிரனட் போல்ட் வென்றார்.

(ம-4,7)

## ஐ.பி.எல் செய்தித் துளிகள்...

### அதிவிரைவாக ஐ.பி.எல் போட்டிகளில் 5 ஆயிரம் ரன்களை கடந்த கே.எல்.ராகுல்

ஐ.பி.எல் போட்டிகளில் அதிவேகமாக 5000 ரன்களைக் கடந்து கே.எல். ராகுல் சாதனை படைத்துள்ளார்.

ஐ.பி.எல் தொடரின் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் லக்னோ- டில்லி அணியுடன் மோதின. இதில் டாஸ் வென்ற டில்லி அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி முதலில் விளையாடிய லக்னோ அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து 160 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டில்லி அணி 17.5 ஓவர் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 161 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் டில்லி அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வீழ்த்தியது.

இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய கே.எல் ராகுல் 42 பந்துகளில் 57 ரன்கள் அடித்து டில்லி அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.


இதன்மூலம் ஐ.பி.எல் போட்டிகளில் அதிவேகமாக 5000 ஓட்டங்களைக் கடந்து வார்னரின் சாதனையை கே.எல். ராகுல் முறியடித்துள்ளார். 130 இன்னிங்ஸ்களில் விளையாடி இந்த சாதனையை அவர் படைத்துள்ளார். ஐ.பி.எல் போட்டிகளில் அதிவேகமாக 5000 ரன்கள் எடுத்தவர்கள் பட்டியல் விபரம் பின்வருமாறு,


1. கே.எல். ராகுல் -130இன்னிங்ஸ்
2. டேவிட்வார்னர் -135 இன்னிங்ஸ்
3. விராட் கோலி -157 இன்னிங்ஸ்
4. ஏபி.டி வில்லியர்ஸ் -161 இன்னிங்ஸ்
5. ஷிகர் தவான் -168 இன்னிங்ஸ்

ஆகிய இடங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(6-8)

## இன்றைய ஆட்டங்கள்






நேரம்: இரவு 7.30

ராஜஸ்தான்

இடம்-சின்னச்சாமி விளையாட்டரங்கு




## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 350 | 250 | 400 |
| உருளைக்கிழங்கு | 170 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 300 | 250 | 300 |
| தக்காளி | 600 | 600 | 700 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 250 | 200 | 200 |
| கோவா | 350 | 350 | 300 | 300 | 400 |
| கரட் | 800 | 600 | 650 | 550 | 600 |
| பூசணி | 200 | 240 | 250 | 240 | 250 |
| புடோல் | 200 | 250 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | 150 | 150 | 150 |
| பாகற்காய் | 600 | 400 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 400 | 150 | 200 | 300 |
| பயற்றங்காய் | 250 | 150 | 200 | 150 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 550 | 450 | 400 | 400 | 600 |
| கறிமிளகாய் | 600 | 300 | 450 | 450 | 800 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 2000 | 1500 | 2400 |
| போஞ்சி | 500 | 500 | 550 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 350 | 250 | -- | 320 |
| கீரை – 1 பிடி | 120 | 80-120 | 100 | 80 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 150 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 150 | 150-220 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 700 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 300 | 600 | -- | -- | -- |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் மூலம் வாக்களிப்பதற்கு 3865 பேர் தகுதி பெற்றுள்ளனர்

## கிளி.மாவட்ட பதில் அரச அதிபர்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 3865 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை மற்றும் பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைக்காக. தபால் மூலம் 3865 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

உள்ளூராட்சி சபை தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 102387 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். மேலும் மாவட்டத்தில் மூன்று சபைகளுக்கும் 66 பேரைத் தெரிவு செய்வதற்காக 659 பேர் போட்டியிடுவதாகவும் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 25, 28 மற்றும் 29 ஆம் திகதி வரை வாக்களிப்புக்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-316)

# ஈழத்து கும்மிப்பாடல் ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகினால் 2025 ஆம் ஆண்டு ஈழத்து கும்மிப் பாடல் தொகுப்பு எனும் நூல் தொகுக்கப்படவுள்ளது.

இவ் ஈழத்து கும்மிப் பாடல் தொகுப்பு நூலினுள் உட்சேர்ப்பதற்காக தங்களிடமுள்ள ஈழத்து கும்மிப் பாடல் ஆக்கங்கள் நூலுருவில் காணப்படின் குறித்த ஆக்கங்களை தபால் மூலமாகவோ/ நேரடியாகவோ எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பாக பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் அலகு, கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-3-8)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி.அமுதினி சாந்தகிரிநாதன் அவர்களின் அன்புத் தந்தையார்



அமரர்.திரு.குருசாமி கணேசலிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கொக்குவில் இந்து கல்லூரி.

(4-2781)


# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை தெல்லிப்பளை உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் சந்திரலிங்கம் நிஷாந்தன் மனைவி விஜிதா
விண்ணப்பதாரர் பெயர் சந்திரலிங்கம் நிஷாந்தன் மனைவி விஜிர்தா முகவரி காள்வை, மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பளை.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 09, கால்வாய் ஒழுங்கை ஆதன இல. 62 இல் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 15.09.2019 ஆந் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் திருமதி காயத்திரி அகிலன் அவர்கள் முகதாவில் இலக்கம் 1273 இல் அத்தாட்சிப்படுத்திய சீதனம் உறுதியால் இவ்வாதனம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.ஆறுமுகம் அவர்களால் அளந்து வரைந்த J/421 இலக்க 25.10.2013 திகதிய நில அளவைப்படத்தில் துண்டு- 1 என காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை "காள்வை" நிலப்பரப்பு (03) குளி பத்து தசம் சைபர் எட்டும் (10.08) வீடும் தெல்லிப்பளை மாவிட்டபுரம் தெற்கு (J/232) கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு :-அம்பிகைபாகன் பெண் பரமேஸ்வரிக்கும் மறுபேருக்குரிய ஆதனம்
வடக்கு :-பாதை
மேற்கு :-காள்வை ஒழுங்கை.
தெற்கு :-தர்மசோதி தர்மகுணச்சந்திரனின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை சந்திரலிங்கம் நிஷாந்தன் மனைவி விஜிர்தா என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு, சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(3997)

# இராசிபலன்

**24.04.2025**
**சித்திரை 11, வியாழக்கிழமை**
**ஏகாதசி முற்பகல் 10.33 மணிவரை**
**சதயம் முற்பகல் 6.59 மணிவரை**

**பூரட்டாதி பின்னிரவு 5.47 மணிவரை**
**சுபநேரம் 7.30-9.00 மணிவரை**
**இராகுகாலம் 1.30-3.00 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

**சந்திராஷ்டமம்- மகம்**

**வளவன்**

**மேஷம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**
அரசு வழியில் சலுகைகள் எதிர்பார்த்தபடி கைகூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, முரண்பாடுகள் விலகும் வாய்ப்புண்டு.

**கடகம்**
உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பிரயாண பயனுண்டு.

**சிம்மம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**கன்னி**
வழிபாடு ஆனந்தம் தரும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உடல் நலன் சீராகி உற்சாகம் கிடைக்கும், கூட்டாளிகள் இணக்கத்துடன் நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**துலாம்**
சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்**
மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், உறவினர் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்**
உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், சுபவிரயங்கள் கூடும்.

**அழகான எதுவும் ஆபத்தில் தான் முடியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் அனுமதிக்கப்பட்ட காணிகளில் விவசாயச் செய்கையை

## விரைவுபடுத்த ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஆண்டு மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட காணிகளில் விவசாயச் செய்கையை விரைவுபடுத்துவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கடந்த ஆண்டு ஆரம்பத்தில் மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு என காணிகள் அனுமதிக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்தக் காணிகளில் மக்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்வதாக விவசாயிகளால் எமக்குப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

குறித்த முறைபாட்டு விடயங்களைக் களைந்து விவசாயிகள் முழுமையாக விவசாயம் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என ஆளுநர் வலியுறுத்தினார்.

வீதிகள் செப்பனிடுவதற்கு இடையூறாக உள்ள பாதுகாப்பு வேலிகளை அகற்றுவது தொடர்பில் இராணுவத்தினருடன் நேரடியாக நேரில் சென்று பார்வையிட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதற்கு அமைவாக விரைவில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான வீதிகள், பிரதேச சபையின் வீதிகள் என்பனவற்றை உடனடியாக செப்பனிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளன என்றும் யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன் குறிப்பிட்டார்.

இதேவேளை பயனாளிகள் விவசாய நடவடிக்கை மேற்கொள்வதற்காக காலையில் வந்து மாலையில் செல்ல வேண்டும் என்ற நிலைமை காணப்படுகின்றது எனவும். அவர்கள் அங்கு கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இராணுவத்தினரிடம் முன்வைக்கப்பட்டது. அந்த மனிதாபிமானக் கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடி பதிலளிப்பதாக இராணுவத்தினர் குறிப்பிட்டனர்.

மேலும் விவசாயக் கிணறுகளையும் புனரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர், யாழ். மாவட்டச் செயலர், வலி. வடக்கு பிரதேச செயலர், வலி. வடக்கு பிரதேச சபைச் செயலரின் பிரதிநிதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர், இராணுவத்தினர் ஆகியோர் பங்கேற்றனர். (6-8)

# சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சட்ட விரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடித்த இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் காலை கட்டைக்காட்டு கடற்பரப்பில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன் பிடித்த இருவர் இரண்டு படகுகளுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ். நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (6-8)

# சீரணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய விசுவாவசு வருஷ வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இரதோற்சவமும், 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நாகபுஸ்கரணி தீர்த்தத்தடாகத்தில் தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியிறக்க உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

# நூற்றாண்டு விழா நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஈழத்து தமிழியல் த.சண்முகசுந்தரம் தமிழியல் "சுவடுகளின் நூற்றாண்டு விழாக் கால நூல் வெளியிடு" நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு .திருமுருகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் க.விநாயகமூர்த்தி மற்றும் வலிகாமம் முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-3-8)

# சங்கானை வைத்தியசாலையூடாக ஆரம்பமான 788 வழித்தட சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ் சங்கானை பிரதேச வைத்தியசாலை வீதியூடான 788 வழித்தட தனியார் பேருந்து சேவைகள் நேற்று காலை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த, சங்கானை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், 788 வழித்தட பேருந்து சங்க உரிமையாளர்களிடம், வைத்தியசாலை வீதியூடான பேருந்து சேவைகளை முன்னெடுக்குமாறு நோயாளர் நலன்புரி சங்கத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இக் கோரிக்கைக்கு இணங்க கீரிமலை, இளவாலை, தொட்டிலடி, மானிப்பாய், யாழ்ப்பாணம் வரை சேவையில் ஈடுபடும் 788 வழித்தடத்தில் இயங்கும் மூன்று தனியார் பேருந்துகள் தமது சேவைகளை நேற்று முதல் குறித்த வைத்தியசாலையின் வழியாக முன்னெடுத்துள்ளன.

இந்நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர், மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சங்கானை வைத்தியசாலை நலன்புரி சங்கத் தினர், யாழ்.மாவட்ட தனியார் பஸ் பேருந்து சங்கத்தின் தலைவர், இளவாலை சிற்றூர்தி சங்கத் தலைவர், வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன் மூலம் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு வருகை தரும் பல தரப்பினர்களும் நன்மைகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்குமென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (6-8)

# இந்திய துணைத் தூதரகம் நடத்தும் ஓவியப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ரவீந்திரநாத் தாகூர் அவர்களுடைய 164 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம் ஓவியப்போட்டி நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இவ் ஓவியப் போட்டிக்கான தலைப்புகளாக; இந்திய கலை மற்றும் கலாசாரம் தொடர்பாக பிரதிபலிக்கும் ஓவியங்கள், இந்தியாவின் பாரம்பரியத் தளங்கள்/இடங்கள் என்பனவாகும்.

இப்போட்டிக்கான விதிமுறைகளாக; 18 வயதுக்கு மேற்பட்ட வடமாகாண பிரஜைகள் யாவரும் பங்குபற்ற முடியும், ஓவியங்கள் A2 (16.5 x 23.4 in) அளவிலான கேன்வாஸ்சில் (canvas) எண்ணெய் அல்லது அக்ரிலிக் ஊடகம் கொண்டு வரைதல் வேண்டும், அனுப்பப்படும் ஓவியங்களின் பின்புறத்தில் பெயர், வயது, தொலை பேசி இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

வரையப்பட்ட ஓவியங்களை ஓவியப்போட்டி-ரவீந்திரநாத் தாகூர் எனத் தலைப்பிட்டு இந்திய துணைத் தூதரகம், 14, மருதடிலேன், நல்லூர், யாழ்ப் பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் மே 7 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

அத்துடன் இவ் ஓவியப் போட்டிக்கான முதலாம் பரிசு-20000 ரூபாய், இரண்டாம் பரிசு-15000 ரூபாய், மூன்றாம் பரிசு-10000 ரூபாய் மற்றும் ஆறுதல் பரிசுகளாக 3500 ரூபாவும் வழங்கப்படவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

# பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.50 மணிக்கு கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி மறுநாள் 30 ஆம் திகதி புதன் கிழமை அதிகாலை 5.55 மணி முதல் 6.50 மணி வரையிலான சுபவேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது என ஆலய தர்ம பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் ஆலய புனராவர்தன நவகுண்ட மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் (திருக்குடமுழுக்கு பெருவிழா) நாளை வெள்ளிக்கிழமை காலை 9.03 மணி முதல் இரவு 10.10 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக இன்று வியாழக்கிழமை காலை 5 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வு இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3-8)

# அரியாலை ஞானவைரவர் அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் (2025) எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மே மாதம் 7 ஆம் திகதி புதன்கிழமை வரை பதினொரு தினங்கள் இடம்பெறவுள்ளது.

இவ் அலங்கார உற்சவ தினங்களில் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு இரதோற்சவமும், 7 ஆம் திகதி புதன் கிழமை காலை 6.45 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவனை தலைக்கவசத்தால் அடித்துக் கொன்ற சக மாணவர்கள்

(கொழும்பு)

பாடசாலை மாணவன் ஒருவனை தலைக்கவசத்தால் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சக மாணவர்கள் 11பேர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

வெலிகெதர காவல் பிரிவுக் குட்பட்ட அரபோல கந்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் அரபோல கந்த மற்றும் அம்பகோட்டே பகுதிகளைச் சேர்ந்த 15 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் உயிரிழந்த மாணவனின் சக பள்ளி மாணவர்கள் என வும் பொலிஸார் தெரிவித்த னர்.


வெலிகெதர காவல் பிரி வுக்குட்பட்ட ஹெவன்பொல பகுதியில் ஏப்ரல் 16 ஆம் திகதி மாணவர்கள் குழு ஒன்று மற்றொரு மாணவனைஅடித்து, உதைத்து, தலைக்கவசங் களைப் பயன்படுத்தி தாக்கியதா கக் கூறப்படுகிறது.

பலத்த காயமடைந்த பாதிக்கப்பட்ட மாணவன் குரு நாகல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் ஹெவன் பொல, சாகரெலிய வட்டத்தைச் சேர்ந்த 16 வயதுடைய மாண வர் என அடையாளம் காணப் பட்டுள்ளார்.

சடலம் குருநாகல் மருத்துவ மனையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளதுடன், மாவத கம மற்றும் வெலிகெதர பொலிஸாரினால் மேலதிக விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (நி-8)

# இலங்கைத் துறைமுகத்தில் தென்கொரிய கப்பல்




(கொழும்பு)


தென்கொரிய கடற்படைக்குச் சொந்தமான கப்பலொன்று உத்தி யோகபூர்வ விஜயம் மேற் கொண்டு கொழும்பு துறைமு கத்தை வந்தடைந்தது.

நேற்று முன்தினம் வருகைதந்த குறித்த கப்பலைக் கடற்படை மரபுகளின் படி இலங்கை கடற்படையினர் வரவேற்றனர்.

149.5 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பல், 262 பணியாளர் களைக் கொண்டுள்ளது.

கப்பலில் வருகை தந்தவர்கள் நாட்டின் சுற்றுலா தளங்களைப் பார்வையிட்ட பின் நாட்டிலிருந்து புறப்படவுள்ளது. (நி-8)

# வத்திக்கான் பயணமானார் கர்தினால் மல்கம் ரஞ்சித்



(கொழும்பு)

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வத்திக்கானுக்கு பயணித் துள்ளார்.

மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான் சிஸின் இறுதி ஆராத னையில் பங்கேற்பதற்காக அவர் அங்கு சென் றுள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸின் மறை வையொட்டி வெற்றிடமாகியுள்ள பாப்பரசர் பதவிக்கான மாநாட்டில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பங்கேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது. (நி-8)

# 4 மாதங்களுக்கு போதுமான இன்சுலின் இருப்பு உள்ளது

## அச்சம் தேவையில்லை என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

அடுத்த நான்கு மாதங்களுக்கு தேவையான இன் சுலின் இருப்பு ஏற் கனவே விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக பொதுமக்கள் அச்ச மடையத் தேவையில்லை எனவும், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரி வித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு தெவித்தார்.

இதன்போது இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை நாட்டில் தேவையான அளவு இன் சுலின் இருப்பு உள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் மருந்து தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க நான்கு முதல் ஆறு மாதங்களுக்கு தேவையான மருந்து இருப்பைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு கார ணங்களால் சில மருந்துகளுக்கு அவ்வப்போது தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும், விநியோ கஸ்தர்களின் பலவீனங்கள் இதற்கு ஒரு காரணமாக இருந்ததாகவும் அமைச்சர் கூறினார். இதை தவிர்க்க, பல நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# அமைச்சர்களுக்கு வழங்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை குறைப்பு

(கொழும்பு)

அமைச்சர்களுக்கு வழங்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை இரண்டாகக் கட்டுப்படுத்தும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், அமைச்சர்களுக்கு மாதத்திற்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவும் 700 லீற்றராக வரையறுக்கப்பட் டுள்ளது.

முன்னதாக, ஒரு அமைச்சருக்கு மூன்று வாகனங்கள் வழங்கப்பட்டு, மாதந்தோறும் 2,250 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
7 இல் சூரி செவ்
கி.பா: 28 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: College,Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15360

பிறப்பு:1977 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
உயரம்:5'9"
தகைமை/தொழில்-Business Computing, Controller (Australia) எதிர்பார்ப்பு: பட்டதாரி, சைவபோசனம்
தொ.இ: B/15362

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா:36
7 இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்:LLB,அரச சட்டவாதி
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15364

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி.பா:9
உயரம்:5'6"
தகைமை/தொழில்: O/L.கடை(Own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15369

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:பரணி
உயரம்:6"
தகைமை/தொழில்: BSc, Technician (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: Only France
தொ.இ: B/15370

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா:63
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: சித்த மருத்துவம்
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில், சைவபோசனம்
தொ.இ: G/14370

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 162cm
தகைமை/தொழில்:. Nursing, Computer Science (Diploma)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14118

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 24
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:Bsc Eng (Textile), Material Developement
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/14009

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி.பா:58 ¼
2 இல் செவ்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MBBS, Consultant
எதிர்பார்ப்பு:Doctor, Engineer, Accountant, Banker
தொ.இ: G/14678

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்:பூரம்
கி.பா: 32
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc, Assistant Lecturer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்.
தொ.இ: G/14605

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதிகள் தாக்குதல்!

## 26 பேர் உயிரிழப்பு

(டில்லி)

**ஜம்மு காஷ்மீரில் அண்மையில் நடந்த மிக மோசமான பயங்கரவாதத்தாக்குதலாக பஹல் காமில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தீவிரவாதிகளால் சுற்றுலாப் பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் மொத்தம் 26 பேர் கொல்லப்பட்டு பலர் காயமடைந்தனர்.**




தாக்குதலில் காயமடைந்தவர்களை வெளியேற்றுவதற்காக இராணுவ ஹெலிகொப்டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

ஏனெனில் அந்தப் பகுதிக்கு கால்நடையா கவோ அல்லது குதிரையில் மட்டுமே செல்ல முடியும்.

பஹல்காமின் பைசரன் பள்ளத்தாக்கில், ஒரு மலையின் உச்சியில் உள்ள புல்வெளியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

தீவிரவாதிகள் காடுகளிலிருந்து வெளியேறி கண்மூடித்தனமாக சுடத் தொடங்கியதாக சாட்சியங்கள் தெரிவித்தன.


துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் வெளியான காட்சிகளில் பலர் அசையாமல் தரையில் கிடப்பதையும், பல பெண்கள் உதவிக்காக மன்றாடுவதையும் வெளிக்காட்டியுள்ளது.

இதேவேளை, பஹல்காம் சுற்றுலாப் பயணிகளின் தாக்குதலுக்குப் பின்னணியில் இருந்த பயங்கரவாதியின் பிரத்யேக முதல் படம் வெளியிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாதக் குழுவான லஷ்கர்-இ-தொய்பாவின் உள்ளூர் கிளையான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது.

தாக்குதல் நடத்தியவர்களைக் கண்டுபிடிக்க பாதுகாப்புப் படையினர் தற்போது முயற்சிகளை தீவிரப்படுத்தி வருகின்றனர். (நி-8)

# உக்ரைனுடன் பேச்சுவார்த்தை அழைப்பு விடுத்தார் புடின்



(மொஸ்கோ)

உக்ரைனுடன் இரு தரப்பு அமைதிப் பேச்சு வார்த்தைக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் அழைப்பு விடுத்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது, ரஷ்யா தொடர்ந்துள்ள போர், மூன்றாவது ஆண்டாக நடக்கிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சிகள் மேற்கொண்டார்.


இது தொடர்பாக, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் ட்ரம்ப் பேச்சு நடத்தினார். ஆனால், போர் நிறுத்தம் செய்ய ரஷ்யா ஒப்புக் கொள்ளவில்லை.

இந்நிலையில், உக்ரைனுடன் இருதரப்பு அமைதிப் பேச்சு வார்த்தைக்கு ரஷ்ய ஜனா திபதி புடின் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து செய்தி சனலுக்கு புடின் அளித்த பேட்டி: எந்தவொரு அமைதி முயற்சிகளுக்கும் நாங்கள் காத்திருக்கிறோம். ஒரு நாள் ஈஸ்டர் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து,

மேலும் போர் நிறுத்தங்களைத் தொடர விரும்புகிறோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

# சவுதி அரேபியா... 21 குண்டுகள் முழ...



(ஜெத்தா)

இந்தியப் பிரதமர் மோடி 2 நாள் அரசுமுறை பயணமாக நேற்று முன்தினம் டில்லியில் இருந்து தனி விமானம் மூலம் சவுதி அரேபியாவுக்கு புறப்பட்டார்.

பிரதமர் மோடியின் விமானம் சவுதி ... நுழை... சார்பி... விமா... வழங்... இந்... சவுதி அ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ட்ரம்பின் கடும் வரிகள்;
## எச்சரிக்கும் சர்வதேச நாணய நிதியம்

**(ஜெனீவா)**

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அனைத்து வர்த்தகப் பங்காளிகள் மீதும் விதிக்கப்பட்ட கடுமையான வரிகளால், வரவிருக்கும் மாதங்களில் உலகளாவிய பொருளாதார உற்பத்தி மெதுவாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் நேற்று முன்தினம் செவ்வாயன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.**



உலகளாவிய நிதித் தலைவர்கள் ட்ரம்பின் குழுவுடன் வரிகளைக் குறைக்க ஒப்பந்தங்களைக் கோரி செவ்வாயன்று வோஷிங்டனை முற்றுகையிட்டனர்.

உண்மையில், பேச்சுவார்த்தைகளின் வேகம் விறுவிறுப்பாக இருந்தது என்று வெள்ளை மாளிகையின் பத்திரிகை செயலாளர் கரோலின் லீவிட் கூறினார்.

இதுவரை 18 வெவ்வேறு நாடுகள் திட்டங்களை வழங்கியுள்ளன.

மேலும் ட்ரம்பின் வர்த்தக பேச்சுவார்த்தைக் குழு இந்த வாரம் 34 நாடுகளைச் சந்தித்து வரிகளைப் பற்றி விவாதிக்க உள்ளது.

சீனாவுடனான வர்த்தக ஒப்பந்தம் "கணிசமாக" கட்டணங்களைக் குறைத்து, சந்தைகளை உயர்த்தும் என்று ட்ரம்ப் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த மாத தொடக்கத்தில் பல நாடுகளுக்கு 10% அடிப்படை இறக்குமதி வரியை நிர்ணயித்த பின்னர், ட்ரம்ப் திடீரென கடுமையான வரிகளை 90 நாட்களுக்கு நிறுத்தி வைத்தார்.


இதேவேளை, உலகின் நம்பர் 1 பொருளாதார நாட்டில் பொருட்கள் மீதான வரிகள் ஒரு நூற்றாண்டில் மிக உயர்ந்த நிலையில் இருப்பதால், 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய வளர்ச்சி 2.8% ஆகக் குறையும் என்று ஐ.எம்.எப் கணித்துள்ளது.

இது ஏனைய நாடுகளுக்கு ஏற்படும் ஒரு வேதனை மட்டுமல்ல: அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி கடந்த ஆண்டு 2.8% ஆக இருந்த நிலையில், 2025 ஆம் ஆண்டில் முழு சதவீதப் புள்ளி குறைந்து வெறும் 1.8% ஆகக் குறையும் என்றும் ஐ.எம்.எப் கணித்துள்ளது. இறக்குமதிகளின் விலை அதிகரிக்கும் போது பண வீக்கத்தில் "குறிப்பிடத்தக்க" மேல்நோக்கிய திருத்தங்கள் ஏற்படும்.

அமெரிக்காவின் பொருட்களுக்கு சீனா 125% வரிகளை விதித்து பதிலடி கொடுத்துள்ளது.

இதன் விளைவாக இரண்டு பெரிய பொருளாதார நாடுகளுக்கு இடையே வர்த்தகத் தடை ஏற்பட்டுள்ளதாகவும் ஐ.எம்.எப் கூறியுள்ளது. (நி-8)

## ரேபியாவில் பிரதமர் மோடி
## ள் முழங்க உற்சாக வரவேற்பு



சவுதி அரேபியா எல்லையில் நுழைந்த போது அந்நாட்டு அரசு சார்பில், எப்-15 ரக போர் விமானம் மூலம் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில், பிரதமர் மோடி சவுதி அரேபியா சென்றடைந்தார்.


அவரை அந்நாட்டு பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் வரவேற்றார்.

அப்போது 21 குண்டுகள் முழங்க பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன்மூலம் கடந்த 40 ஆண்டுகளில் ஜெத்தா நகரம் சென்ற முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையையும் பெற்றார்.

இருநாட்டு உறவு, வர்த்தகம், பொருளாதாரம், மூதலீடு உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

இரு நாடுகளுக்கு இடையே முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)



## பஹல்காம் தாக்குதல்
## மனதை உலுக்கும் புகைப்படம்



(டில்லி)

காஷ்மீரின், பஹல்காம் பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 26 பேர் உயிரிழந்தனர்.

இத் தாக்குதலில் அரியானாவை சேர்ந்த 26 வயதான கடற்படை அதிகாரி வினய் என்பவரும் உயிரிழந்தார். 7 நாட்களுக்கு முன்பு இவருக்கு திருமணமான நிலையில், தேனிலவு கொண்டாட ஜம்மு காஷ்மீர் வந்தபோது மனைவி கண் முன்னே அவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கணவனை இழந்த மனைவி அவர் அருகே செய்வதறியாது அமர்ந்திருக்கும் புகைப்படம் இணையத்தில் வெளியாகி அனைவரது மனங்களையும் உலுக்கியுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் குடித்தொகை வேறுபாடுகளும், குடியடர்த்தியும், குடிப்பரம்பலும் 1871 - 2022

**01**

வாழ்நாள் பேராசிரியர்.பொன்.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.



இலங்கைத் தமிழ் மக்கள் குறிப்பாக வடபகுதி மக்கள் கடந்த நூறு ஆண்டுகளாகக் குடிவெளியேற்றத்துக்குட்பட்டு இருப்பதாலும் தமிழரின் பிறப்பு வீதம் குறைந்து செல்வதாலும் பல சமூக - பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் எம்மத்தியில் தோன்றியுள்ளன. இப்பின்புலத்திலேயே வடமாகாணத்தின் குடித்தொகை பற்றி நோக்கப்படவுள்ளது.

இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம் இன்றைய மாவட்டங்கள், பிரதேச செயலகப் பிரிவுகளின் முன்னைய குடித்தொகையைக் கணித்தலும், மாகாண, மாவட்ட செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் குடித்தொகை வேறுபாடுகளைக் கணித்தலும், குடியடர்த்தி, குடிப்பரம்பலின் போக்குகளை அடையாளம் காணுதலுமாகும். இக்கட்டுரை முழுமையாக இலங்கைக் குடிசனக் கணிப்புகள், இலங்கைப் புள்ளிவிபரக் கைந் நூல்கள் மற்றும் மாவட்ட, பிரதேசக் கைந் நூல்கள் மற்றும் நீண்டகாலக் கள ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட தரவுகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டது.

நிர்வாகக் கட்டமைப்பு:- 1833 இல் கோல்புறுக் - கம்ரூன் நிர்வாகச் சீர்திருத்தப்படி இலங்கை மேற்கு, மத்தி, தெற்கு, வடக்கு, கிழக்கு என ஐந்து மாகாணங் களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. 1833- 1873 இற்கு இடைப்பட்ட காலத்தில் வடமாகாணத்தின் கீழிருந்த நுவரகலாவியல் பிரதேசம் 1873 இல் புதிதாக உருவாக்கப்பட்ட வடமத்திய மாகாணத்துடன் சேர்க்கப்பட்டது. 1873 இலிருந்து இன்று வரை வடமாகாணத்தின் எல்லைகளில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

வடமாகாணம் 1873 இல் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களைக் கொண்டிருந்தது. 1920 களின் பிற்பகுதியில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டதுடன் முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் இருந்த பனம்காமம் பிரிவு மன்னார் மாவட்டத்துடனும், துணுக்காய்ப் பிரிவு யாழ்ப்பாண மாவட்டத்துடனும் இணைக்கப்பட்டன. மேலும் வவுனியா மாவட்டத்திற்குள் இருந்த மேற்கு மூலைப் பிரிவு மன்னார் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது. ஒன்றிணைக்கப்பட்ட வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டப் பகுதிகள் முல்லைத்தீவு மாவட்டம் என அழைக்கப்பட்டது.

மாவட்டச் செயலகம் முல்லைத்தீவில் அமைந்தது. முல்லைத்தீவின் போக்குவரத்து வசதி குறைவாக இருப்பதைக் காரணம் காட்டி மாவட்டத்தின் தலைமைச் செயலகம் 1930 களின் ஆரம்பத்தில் வவுனியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதுடன் மாவட்டத்தின் பெயரும் வவுனியா மாவட்டம் என அழைக்கப்பட்டது. 1977 இல் அமைக்கப்பட்ட மொறகொட மாவட்ட நிர்ணயக் குழுவின் சிபாரிசின் பெயரில் 1978 இல் முல்லைத்தீவு மாவட்டம் முன்னர் இருந்த பகுதிகளை உள்ளடக்கிய புதிய மாவட்டமாக மீளுருவாக்கம் பெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மீளுருவாக்கத்துடன் வடமாகாண மாவட்டங்களின் எண்ணிக்கை 4 ஆகக் காணப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தென் பகுதியான கிளிநொச்சிப் பிரதேசம் சமூக - பொருளாதார நிலைகளில் குடாநாட்டுப் பகுதிகளின் நிலையைவிடப் பின்தங்கியிருந்ததால் அன்றைய கிளிநொச்சித் தொகுதியைத் தனி மாவட்டமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை அன்றைய கிளிநொச்சிப் பாராளுமன்றப் பிரதிநிதியாகவிருந்த திரு.ப.ஆனந்த சங்கரி முன்வைத்து அதற்கான பரப்புரையை முன்னெடுத்தார். இச்சூழ்நிலையில் 1984 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டம் உருவாகியது. இம்மாவட்டம் யாழ்ப் பாண மாவட்டத்தின் 55% நிலப் பரப்பையும், 100,000 மக்களையும் கொண்டதாக இருந்ததுடன் யாழ்ப் பாண மாவட்டத்தின்கீழ் இருந்த சகல நீர்ப்பாசனக் குளங்களும் புதிய மாவட்டத்தின்கீழ் அடங்கின.

1960களில் 20 காரியாதிகாரி பிரிவுகளைக் கொண்டிருந்த வடமாகாணம் இன்று 34 பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. முன்னர் தனியொரு பிரிவாக இருந்த பிரிவுகள் பல இன்று இரண்டு மூன்று பிரதேசப் பிரிவுகளாக மாற்றம் பெற்றுள்ளன. மக்கள் தொகை அதிகரிப்பும், அரச சேவைகளைச் சிறப்பாகக் கொடுக்கும் நோக்கமும் பிரதேசப் பிரிவுகள் அதிகரிப்புக்குக் காரணங்களாக இருந்தன.

இன்றைய பிரதேச செயலகம் முன்னர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்றும் அதற்கு முன்னர் பிரதேச வருமான அதிகாரி பிரிவு என்றும் 1938 இற்கு முன்னர் மணியகாரர் பிரிவு எனவும் அழைக் கப்பட்டிருந்தது.

1938 இல் மணியகாரர் பதவியும், உடையார் பிரிவுகளும் ஒழிக் கப்பட்டன. மேலும் அன்றைய உடையார் பிரிவுகள் இன்றைய அபிவிருத்திக்கு எந்தளவு தூரம் பொருத்தமாக இருக்கும் என்பது நோக்குதற்குரியது.

வடமாகாணத்தில் ஆரம்பத்தில் 245 கிராமத் தலைமைக்காரர் பிரிவுகள் உருவாக்கப்பட்டு, இவை 1980களின் பிற்பகுதிவரை நடை முறையில் இருந்தன. இப்பிரிவு மாகாணம் தழுவியதாக இருந்த துடன் முதலாவது இலக்கப்பிரிவு நெடுந்தீவு மேற்காகவும் கடைசி 245 ஆவது பிரிவு கொக்குத்தொடு வாயாகவும் இருந்தன.

இப்பிரிவுக் கட்டமைப்பு 100 ஆண்டுகளுக்குமேல் மாற்றமடையாமல் இருந்துள்ளது. கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை 1989இலும் 1993இலும் அதிகரிக்கப்பட்டன. இன்று வடமாகாணத்தில் 933 கிராம அதிகாரி பிரிவுகள் இருக்கின்றன.

மாவட்ட அடிப்படையில் கிராம அதிகாரிகள் பிரிவுகளின் எண் ணிக்கை பின்வருமாறு:- யாழ்ப் பாணம் 435, கிளிநொச்சி 95, மன் னார் 151, வவுனியா 101, முல்லைத் தீவு 151. குடித்தொகைக் கணிப்புகள் இலங்கையில் முதன் முதலாக தேசிய ரீதியில் 1871ஆம் ஆண்டில் குடிக் கணிப்பு இடம் பெற்றிருந்தது. இதன் பின்னர் 1881, 1891, 1901, 1911, 1921, 1931, 1946, 1953, 1963, 1971, 1981, 2001, 2012 ஆம் ஆண்டு களில் குடிக்கணிப்புகள் இடம் பெற்றி ருந்தன.

1931ஆம் ஆண்டுக்கணிப்பு 10% மாதிரி எடுப்பின்மூலம் இடம் பெற்றது. 2001 ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பு வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங் களில் முழுமையாக இடம்பெற வில்லை. இதனால் 2001ஆம் ஆண்டுக் குடித்தொகை முழுமை யானதில்லை. நம்பகத்தன்மையும் மிகக் குறைவு.

அட்டவணை II இல் வடமாகாணத்தின் குடித்தொகை, மாற்ற விபரங்கள்-1871-2022 இற்கு இடைப்பட்ட காலத்திற்குரிய குடித்தொகை, கணிப்புகளுக்கு இடையான வேறுபாடுகள் எண்ணிக்கையிலும், வீதத்திலும் மற்றும் மாகாணத்தின் குடித்தொகை இலங்கையின் குடித்தொகையில் எவ்வளவு வீதம் எனவும் காட்டப்பட்டுள்ளன.

| பிரிவு | குடித்தொகை | |
|---|---|---|
| | 1814 | 1824 |
| யாழ்ப்பாணம் | 163849 | 123188 |
| நெடுந்தீவு | 2470 | 2432 |
| மன்னார் | 13028 | 22436 |
| வன்னி | 11369 | |
| மொத்தம் | 127369 | 148056 |

மூலம்: இலங்கைக் குடித்தொகைக்கணிப்புகள் 1921 Vol I Part I பக் 5-7.

**அட்டவணை II குடித்தொகை மாற்ற விபரங்கள்**

| குடிக்கணிப்பு ஆண்டு | வடமாகாணக் குடித்தொகை | குடிக்கணிப்பு இடைவேறுபாடு | | இலங்கைக் குடித்தொகையில் மாகாணத்தின் வீதம் |
|---|---|---|---|---|
| | | எண் | வீதம் | |
| 1871 | 281066 | - | - | 11.7 |
| 1881 | 302500 | +20834 | +7.4 | 11.0 |
| 1891 | 319296 | +16796 | +5.6 | 11.0 |
| 1901 | 340936 | 1646 | +6.8 | 10.6 |
| 1911 | 369651 | +28715 | +8.4 | 9.6 |
| 1921 | 374329 | +5178 | +1.4 | 9.6 |
| 1931 | 398874 | +24045 | +6.6 | 9.3 |
| 1946 | 479572 | +80698 | +20.2 | 7.5 |
| 1953 | 570650 | +91078 | +19.0 | 7.2 |
| 1963 | 741841 | +170691 | +29.9 | 7.0 |
| 1971 | 874626 | +138285 | +13.0 | 6.9 |
| 1981 | 1111468 | +236842 | +27.1 | 7.5 |
| 2001 | 1010720 | -120748 | -9.0 | - |
| 2012 | 1059202 | -52256 | -4.8 | 5.2 |
| 2022 | 1173000 | +43798 | +0.8 | 5.4 |

மூலம்: இலங்கைக் குடித்தொகைக்கணிப்புகள்

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோக செய்கையில் அறக்கொட்டியான் புழுத்தாக்கம்

## விவசாயிகள் கவலை



(தருமபுரம்)


கிளிநொச்சி மாவட்டத்தில் அறக்கொட்டியான் புழுத் தாக்கத்தால் சிறுபோக செய்கை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை இரணைமடுக்குளம் உள்ளிட்ட அனைத்து குளங்களின் கீழ் சிறுபோக செய்கை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அறக்கொட்டியான் புழுத்தாக்கம் பயிர்களை முற்றாக அழிப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முரசுமோட்டை, ஊரியான், பன்னங்கண்டி பகுதிகளில் குறித்த புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள விவசாயிகள் கடந்த காலபோக நெற்செய்கையிலும் நோய்த் தாக்கம் காரணமாக தாம் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியிருந்தாகவும் தெரிவித்தனர்.

அறக்கொட்டியான் புழுத் தாக்கம் ஏனைய பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் பரவுவதற்கு முன் சம்பந்தப்பட்ட தரப்பு அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வருகை தந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8-316)

# வீடொன்றில் மறைத்து வைத்திருந்த 30 போத்தல் கசிப்பு மீட்பு- ஒருவர் கைது




(குருமன்காடு)

வவுனியாவில் 30 போத்தல் கசிப்புடன் சந்தேக நபரொருவரை பூவரசங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா வாரிக்குட்டியூர் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு விற்பனை செய்யப்பட்டதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் இரவு வீடொன்றில் சோதனை செய்த பொலிஸார் அங்கு சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 30 மதுபானக் கசிப்புப் போத்தல்களை மீட்டிருந்தனர்.

அதனை உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 48 வயதுடைய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

மேலும் அந் நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார், விசாரணைகளின் பின்னர் அந் நபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர். (6-8-250)

# சிறந்த இயக்குனர் விருது தட்டிச் சென்ற ஈழத்து இளைஞன்

(மன்னார்)

(Salt House Creative Inter national Film Festival) நடத்திய சர்வதேச அவுஸ்திரேலிய திரைப்பட போட்டியில் 28 நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட 100 இற்கு மேற்பட்ட திரைப்படங்களில் மன்னாரைச்சேர்ந்த இளைஞன் கவிவர்மன் 2025 ஆம் ஆண்டிற்கான "சிறந்த இயக்குனர்" எனும் சர்வதேச விருதை பெற்றுள்ளார். கடந்த வருடம் வெளியான மடமைதகர் திரைப்படம்.

தற்கொலை எந்த பிரச்சினைக்கும் தீர்வாகாது எனும் கதை கருவை மையமாக கொண்டு உருவாக்கப்பட்டு இருந்தது.

குறித்த திரைப்படம் திரையரங்கில் வெளியிடப்பட்டு விமர்சன ரீதியாக பல்வேறு தரப்பட்ட மக்களின் பாராட்டுக்களை குறித்த குறும்படம் பெற்ற நிலையில் Salt House Creative International Film Festival நடத்திய போட்டியில் சிறந்த இயக்குனருக்கான விருதை தன் வசப்படுத்தியுள்ளது



சர்வதேச நாடு ஒன்றில் மன்னார் இளைஞன் சிறந்த குறும்பட இயக்குனருக்கான விருதை பெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (6-8-285)

# சைபர் குற்ற செயல்கள் அதிகரிப்பு

(கொழும்பு)


இவ் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 2,500 சைபர் குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணனி அவசர தயார்நிலைக் குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் 164 சம்பவங்கள் இணைய மோசடிகளுடன் தொடர்புடையதாக கணனி அவசர தயார்நிலைக் குழுவின் அதிகாரி சாருக்க தமுனுபொல குறிப்பிட்டுள்ளார். 162 கணக்குகள் ஹேக் செய்யப்பட்டதாகவும், 291 போலி கணக்குகள் அடையாளம்காணப்பட்டுள்ளது.

சிறுவர்கள் தொடர்பான ஏழு ஒன்லைன் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களும் பதிவாகியுள்ளன, அதிகரித்து வரும் டிஜிற்றல் பயன்பாடு சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வை ஊக்குவிப்பதில் விரைவான நடவடிக்கையின் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது என தமுனுபொல எச்சரித்துள்ளார். (நி-6-8)

# வெளிநாட்டு முதலீடு வேலை வாய்ப்பில் இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

## ஐக்கிய அரபு அமீரகம்



(கொழும்பு)

எரிசக்தி, சுற்றுலா, வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில் இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என ஐக்கிய அரபு இராச்சியத்தின் உப பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான ஷேக் அப்துல்லா பின் சயீட் அல் நஹியான் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இலங்கையில் முதலீட்டிற்கு உகந்த சூழல் உருவாகியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களைப் போன்று முதலீடுகளை வலுவிழக்கச் செய்யும் நிலைமை ஏற்பட மீண்டும் இடமளிக்கப்படாது என்றும், முதலீடுகளைப் பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையிலான, நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தி, மேம்படுத்துவதையும், இரு நாடுகளும் பொருளாதார நன்மைகளை ஈட்டிக்கொள்ள வேண்டும் என்பதையும் நோக்காகக் கொண்டு, ஐக்கிய அரபு இராச்சியத்தின் உப பிரதமரும் அவரது குழுவினரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (6-8)

# மே 15 முதல் படகுச்சேவை மன்னார் - இராமர்பாலம் வரை

(மன்னார்)

மன்னார், தலைமன்னார் பகுதியில் கடலுக்குள் காணப்படுகின்ற இராமர் பாலத்தின் ஆறு தீடைகள் (மண்திட்டுகள்) வரை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கு அழைத்துச் செல்லும் படகுச் சவாரி திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இப் படகுச் சேவை தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது மே மாதம் 15 ஆம் திகதி இத்திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டு நீண்ட காலமாக தாமதமான இந்த திட்டத்தை வெகு விரைவில் நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக குறித்த கூட்டத்தில் குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

அதேநேரம் பாதுகாப்பு ஏற்பாடுகள், பயணிகள் எண்ணிக்கை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பில் கடற்படையினர் அறிக்கை சமர்ப்பிப்பார்கள் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த கட்டமாக சுற்றுலாப் பயணிகளிடம் அறவிடப்படும் கட்டணம் தொடர்பில் தீர்மானிப்பது எனவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் பத்திநாதன் மற்றும் மன்னார் மாவட்ட வனஜீவ ராசிகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.எம். கீர்த்தி ஸ்ரீ சந்திரரத்ன மற்றும் பிரதேச செயலாளர், முப்படையினர், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (6-8-285)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 755





கன்னிப் பெண்களாயிருப்பவர்கள் எத்தனை பேரை வேண்டுமானாலும் மணந்து கொள். உன் பாட்டனின் தந்தை புகழ் பெற்ற பராந்தகச் சக்கரவர்த்தி, ஏழு பெண்களை மணந்து கொண்டார், அவரைப் போல் நீயும் மணந்துகொள். ஆனால் பெரிய பழுவேட்டரையனை மணந்து கொண்ட மாயமோகினியைக் கண்ணெடுத்தும் பாராதே!"

"மன்னிக்க வேண்டும் தாத்தா! அந்த மாதிரி குற்றம் ஒன்றும் நான் செய்ய மாட்டேன். சோழ குலத்துக்கும் மலையமான் குலத்துக்கும் களங்கம் உண்டு பண்ண மாட்டேன்!"

"அப்படியானால் அவள் அழைப்புக்காக ஏன் போகிறாய்? குழந்தாய்?" "உண்மையை உங்களிடம் சொல்லிவிட்டே போகிறேன். அவளுக்கு ஒரு சமயம் நான் ஒரு பெரிய தீங்கு செய்தேன். அதற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளப் போகிறேன்" என்றான் கரிகாலன்.

"இது என்ன வார்த்தை? ஒரு பெண்ணிடம் நீ மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாவது? என் காதினால் கேட்கச் சகிக்க வில்லையே?" என்றார் மலையமான்.

ஆதித்த கரிகாலன் சிறிது நேரம் தலைகுனிந்த வண்ணமாக இருந்தான். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, பாட்டனாரிடம் பழைய வரலாற்றை ஒருவாறு கூறினான். வீரபாண்டியனைத் தான் தேடிச் சென்று அவன் ஒளிந்திருந்த இடத்தைக் கண்டுபிடித்ததையும், நந்தினி குறுக்கிட்டு உயிர்ப் பிச்சை கேட்டதையும், தான் அதைக் கேட்காமல் ஆத்திரப்பட்டு அவனைக் கொன்றதையும் அதுமுதல் தன் மனம் நிம்மதியில்லாமல் அலைப்புறுவதையும் பற்றி விவரமாகக் கூறினான்.

"அந்த ஞாபகம் என்னை ஓயாமல் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறது. தாத்தா! அவளை ஒரு தடவை பார்த்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டால்தான் என் மனம் நிம்மதி அடையும். அவளும் போனதையெல்லாம் மறந்துவிடத் தயாராகியிருப்பதாகக் காண்கிறது. இராஜ்ஜியத்தில் குழப்பம் விளையாமல் பார்த்துக் கொள்வதிலும் சிரத்தைக் கொண்டிருக்கிறாள். அதற்காகவே என்னை அழைத்திருக்கிறாள். போகும் காரியத்தை முடித்துக் கொண்டு வெகு சீக்கிரமாகவே காஞ்சிக்குத் திரும்பி விடுவேன், தாத்தா! திரும்பி வந்ததும் என் தம்பியைக் கண்டு பிடித்துக் கொண்டு 'வருவதற்காகக் கப்பல் ஏறிப் புறப்படுவேன்" என்றான் ஆதித்த கரிகாலன். கிழவர் மலையமான் ஒரு பெருமூச்சு விட்டு, "இது வரையில் விளங்காமலிருந்த பல விடயங்கள் இப்போது எனக்கு விளங்குகின்றன. இன்று வரை மர்மமாக இருந்த பல காரியங்கள் அர்த்தமாகின்றன. விதியை வெல்ல யாராலும் முடியாது என்பது நிச்சயந் தான்!" என்றார்.

### அத்தியாயம் 4
### ஐயனார் கோவில்


கெடில நதிக் கரையில் பாட்டனும் பேரனும் பேசிக் கொண்டிருந்த அதே சமயத்தில் கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள திருக்கானாட்டுமுள்ளூர் என்னும் ஊரில் பழைய நண்பர்களான ஆழ்வார்க் கடியானும் வந்தியத்தேவனும் ஒரு விநோதமான காரியத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நடப்பது எல்லாம் நன்மைக்கே



காட்டு ராஜா சிங்கத்தின் குகை வாசலில், ஏகப்பட்ட மிருகங்களின் கூட்டம். காட்டு ராஜா, வேட்டையாடச் சென்ற போது, கால்விரலில் அடிபட்டு, விரல் துண்டாகி விட்டதென்று அறிந்து துக்கம் விசாரிக்கத்தான் காட்டுப் பிரஜைகளான மிருகங்கள் கூடியிருந்தன.

ஒவ்வொரு மிருகமாக வரிசையில் நின்று, குகையின் உள்ளே சென்று, சிங்க ராஜாவைப் பார்த்து விட்டுத் திரும்பின.

சிங்கராஜா காலில் பலமான கட்டுடன், கட்டிலில் படுத்துக் கிடந்தது. அருகே சிங்கராணி, வழியும் கண்ணீரும் சிந்திய மூக்குமாக அமர்ந்து இருந்தது.

ஒவ்வொரு மிருகமாக வரிசையாகச் சென்று கொண்டிருந்த போது, வரிசையின் இடையே வந்து, புகுந்து கொண்ட குள்ள நரி, சிங்கராஜாவின் அருகே சென்றும் பெருமூச்சு விட்டபடி "நடப்பது எல்லாம் நன்மைக்கே" என்றது. சிங்கராஜாவுக்கு கடுங்கோபம் வந்துவிட்டது.

நமது காலிலுள்ள ஒரு விரலே போய் விட்டது. இந்தக் குள்ள நரி, நடப்பதெல்லாம் நன்மைக்கே. என்று கூறுகிறதே. பிடி அதை. அடைத்துவை, குகைச் சிறையில்" எனக் கட்டளை இட்டது சிங்கராஜா.

சிப்பாய்க் குரங்குகள் பாய்ந்து, நரியைப் பிடித்து இழுத்துச் சென்றன. "ஒவ்வொரு காரியமும் நமது நன்மைக்குத்தான் நடக்கிறது என்ற உண்மையைத்தானே சொன்னேன்" என்று புலம்பிய படி சென்றது குள்ள நரி.

சிங்கராஜாவின் காலிலுள்ள புண் குணமாவதற்கு, மூன்று மாத காலம் கடந்தது. காலில் ஒருவிரல் இல்லாமையால், சிங்கராஜா கம்பிரமாக நடக்க இயலாமல், நொண்டி நொண்டி நடந்தது. அதனால் மிருகங்கள் எல்லாம் மறைமுகமாக "நொண்டி ராஜா" என அழைத்தன.

இப்படிச் சிங்கராஜாவை எல்லாரும் கேலி செய்வதைக் கேட்டு, சிங்கராணிக்கு மிகுந்த வருத்தம். என்ன செய்வது? இந்தப் பட்டத்தைச் சூட்டியது எந்த மிருகம் என்பது தெரிந்தால், இளவரசன் சிங்கக் குட்டியிடம் தண்டனை கொடுக்கச் சொல்லலாமே என நினைத்தது.

உண்மையில் இப்படி பெயர் வைத்தது. குறும்புக்கார முயல் என்பது எவருக்கும் தெரியாது.

சிறையில் அடைபட்டிருந்த குள்ளநரிக்கு, சைவ உணவே தினசரி ஒரு வேளை தரப்பட்டது. காட்டுக் கிழங்கையும், கனிகளையும், பார்த்தாலே குள்ளநரிக்கு குமட்டிக் கொண்டு வரும், என்ன செய்வது? வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்காமல், வார்த்தையைக் கொட்டி விட்டு, வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டோமே.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கின்றோம்.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கின் கல்வி குறித்து பிரதமர் கொண்ட கவலை

வட மாகாணத்தின் கல்வி கீழ்நிலையில் இருப்பது குறித்துப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தனது கவலையை வெளியிட்டார்.

உண்மை. எங்கள் வடக்கு மாகாணத்தின் கல்வி வீழ்ச்சி கண்டுள்ளதென்பதை பரீட்சைப் பெறுபேறுகள் ஆதாரப்படுத்தி நிற்கின்றன.

பொதுவில் வட மாகாணத்தின் கல்வி என்பது யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான பாடசாலைகள் மற்றும் ஏனைய மாவட்டங்களில் இருக்கக்கூடிய ஒரு சில முன்னணிப் பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்களின் பெறுபேறுகளை மட்டுமே குறிப்பதாகவுள்ளது.

மற்றும்படி ஏனைய பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்கள், அவர்களின் அடைவு மட்டம் எவ்வாறாக உள்ளதென்பது குறித்த கண்காணிப்பும் கருசனையும் போதுமானதாக இல்லை.

அதிலும் தீவகம் மற்றும் யாழ்.மாவட்டம் உட்பட ஏனைய மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்கள் தொடர்பில் கருசனை காட்டுவதற்கு இங்கு யாருமே இல்லை எனலாம்.

உதாரணத்துக்கு தீவகத்தின் கல்வி நிலையை ஒருகணம் எடுத்து நோக்கினால், உண்மை தெரியவரும்.

ஆம், அகில இலங்கையில் மாணவர்களின் அடைவு மட்டத்தில் எமது தீவக வலயம் கடைசி நிலையில் இருப்பதைக் காண முடிகிறது.

இவ்வாறான நிலைமை எதற்கானதென்பது குறித்து ஆராய்வதற்கு எவருக்கும் நேரமில்லை.

எமது பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் மிகவும் ஈடுபாடு காட்ட வேண்டிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளக முரண்பாட்டில் மூழ்கிக் கிடக்கிறது.

தாராளமான வேதனங்களைப் பெற்றுக் கொள்கின்ற ஒரு கல்விச் சமூகம் தங்களை தமிழ்ச் சமூகத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்கின்ற மனநிலையில் இருப்பதுதான் மிகவும் வேதனைக்குரியது.

அதேநேரம் சிங்கள மற்றும் முஸ்லிம் கல்வியாளர்கள் – அரசியல்வாதிகள் தங்கள் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் காட்டுகின்ற ஆர்வம் மிகக் கனதியானது.

அவர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மூலம் முன்னோடிக் கருத்தரங்குகளை நடத்தி தமது மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்துகின்றனர்.

அதேநேரம் எங்கள் பிள்ளைகள் கடுமையாகப் படிக்கின்றனர். கல்விக்கான அவர்களின் அர்ப்பணிப்பை மனித மொழிகளில் கூறிவிட முடியாது. அவர்களுக்கு ஏற்றாற்போல் பெற்றோர்களும் தங்களை அர்ப்பணிக்கின்றனர்.

இருந்தும் என்ன செய்வது உயர்மட்ட கல்வியாளர்களின் வழிகாட்டல்கள், கருத்தரங்குகள், மாதிரி வினாத்தாள்கள் என்ற வசதி வாய்ப்புகள் இல்லாததால் திறமைமிக்க எங்கள் மாணவர்களின் அர்ப்பணிப்பு விளலுக்கு இறைத்த நீராகி விடுகிறது.

இங்குதான் பிரதமர் ஹரிணியின் கவலை; நியாயப்பாட்டுடன் கருத்திற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தை உடனடியாக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்

### ஆளும்கட்சியிடம் வலியுறுத்துகிறார் நாமல் எம்.பி

(சிலாபம்)

இந்தியாவுடன் இரகசியமாக செய்து கொண்ட ஒப்பந்தத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிலாபம் பகுதியில் நேற்று புதன்கிழமை (23) நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச நிர்வாகத்தில் நாட்டு மக்கள் மத்தியில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதாக அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் இன்றுவரையில் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவில்லை

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தங்களில் உள்ள விடயங்களை அறிந்து கொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. நாட்டின்பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை மூடிமறைப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை.

159 பெரும்பான்மை பலமுள்ளது என்பதால் இந்த அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதில்லை. தன்னிச்சையாக செயற்படுகிறது. பெரும்பான்மை பலம் எம்மிடமும் இருந்தது. ஆகவே அதிகாரம் என்பது நிலையற்றது என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியது. அந்த வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்த முதல் வருடத்திலேயே நிறைவேற்றுவதாக குறிப்பிடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அந்த வாக்குறுதிகள் குறிப்பிடப்படவில்லை.

தேர்தல் மேடைகளில் குறிப்பிட்ட வாக்குறுதிகள் கூட வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. அனைத்து விடயங்களிலும் பொய் மாத்திரமே மிகுதியாகியுள்ளது. தேர்தல் வெற்றிக்காக நாங்கள் மக்களுக்கு பொய்யுரைக்கவில்லை. முடிந்ததை மாத்திரம் குறிப்பிட்டோம் என்றார்.(ம-7)

# தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பில் உயர் நீதிமன்ற விசாரணை அவசியம்

### கோருகிறார் சட்டமா அதிபர்

(கொழும்பு)

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்தமை தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 12 பேருக்கு எதிரான வழக்கை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மூவர் கொண்ட அமர்வு முன்னிலையில் விசாரணை செய்ய வேண்டும் என்று சட்டமா அதிபர் பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதத்தை சட்டமா அதிபர் பிரதம நீதியரசருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ததால் இலங்கைக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட தீங்கைக் கருத்தில் கொண்டு இந்த வழக்கை 2018ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க சிறப்புச் சட்டத்தின் கீழ் ஒரு சிறப்பு வழக்காகக் கருதி நிரந்தர மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட வேண்டும் என்று சட்டமா அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-7)

### வடக்கில் கோர தாண்டவமாடும்

# வெள்ளை ஈ தொற்றுப் பரவலை கட்டுப்படுத்த விஷேட திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வெப்பமான கால நிலை நிலவிவரும் நிலையில் வெள்ளை ஈ தொற்று மீண்டும் துரித கதியில் பரவ ஆரம்பித்துள்ளது.

ஏலவே தென்னை மரங்கள் பல இத்தொற்றால் அழிவின் விளிம்பை எட்டியுள்ள நிலையில் இந்நோய்த் தொற்றானது மா உள்ளிட்ட ஏனைய தாவரங்களிலும் பரவ ஆரம்பித்துள்ளது.

இந் நிலையில் வடக்கு மாகாணத்தில் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில், வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கு வேப்பெண்ணை, சேர்வக்ஸல் கரைசலைப் பயன்படுத்தி தென்னை ஓலையின் கீழ்ப் பகுதியைக் கழுவும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என தென்னை பயிர்ச்செய்கை சபையின் உதவிப் பொது முகாமையாளர் ரி.வைகுந்தன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமருந்தை (Surfactant) சாதாரணமாக பூச்சி நாசினிக்கு பயன்படுத்தும் அளவை விட 4 மடங்கு அதிகம் பயன்படுத்தித் தெளிப்பதன் ஊடாக வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் சாதகமான முடிவு கிடைக்கப்பெற்றுள்ளதாக பிராந்திய மேலதிகப் பணிப்பாளர் எஸ்.ராஜேஸ்கண்ணா தெரிவித்தார்.

அதேநேரம் இயற்கை முறையில் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர், இந்த முயற்சிகளை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் எனவும் மக்களுக்கு வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த அணுக வேண்டிய விவரங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

கலந்துடையாடலின் முடிவில் உடனடியாகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகம் பாதிப்புக்குள்ளான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அங்கு இதைக் கட்டுப்படுத்துவதற்கான மாதிரி செயற்பாடுகள் மக்களுக்கு செய்து காட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)

## ஜம்மு காஷ்மீர் தாக்குதலுக்கு ஜனாதிபதி அநுர கண்டனம்

(கொழும்பு)

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரின் சுற்றுலாப் பயணிகள் மீது பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலங்கை தமது கண்டனத்தைத் தெரிவிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இந்தியாவில் இடம்பெற்ற கோழைத்தனமான பயங்கரவாதத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம் உயிரிழந்தவர்களுக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம். இலங்கை எப்போதும் இந்திய மக்களுடன் ஒற்றுமையாக நிற்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'விசுவாவசு வருஷ' புத்தாண்டு பலன்கள்

## எந்தக் காரியத்தையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்யும் மகர ராசி நேயர்களே!



**கிரகநிலை-** தனவாக்கு குடும்பஸ்தானத்தில் சனி - தைரிய வீரிய ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), புதன் - சுக ஸ்தானத்தில் சூரியன் - பஞ்சம ஸ்தானத்தில் குரு - களத்திர ஸ்தானத்தில் செவ்வாய் - பாக்கிய ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத்தில் சந்திரன் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 26-04-2025 அன்று ராகு பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 26-04-2025 அன்று கேது பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார் .

02-07-2025 அன்று சனி பகவான் வக்கிர நிலை ஆரம்பம் ; 17-11-2025 அன்று சனி பகவான் வக்கிர நிவர்த்தி அடைகிறார் ; 06-03-2026 அன்று சனி பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 11-05-2025 அன்று குரு பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 08-10-2025 அன்று குருபகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

18-11-2025 அன்று குரு பகவான் வக்கிரம் ஆரம்பம் ; 21-12-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் குரு பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 17-03-2026 அன்று குரு பகவான் வக்கிர நிவர்த்தி.

**பலன்கள்:** எந்த காரியத்தையும் செய்யும் முன் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து செய்யும் மகர இராசி நேயர்களே! இந்த ஆண்டு வருமானம் சீராக இருப்பதால் கடன்கள் படிப்படியாக குறைந்துவிடும். உற்றார் உறவினர்களை அரவணைத்துச் செல்வீர்கள். பிராணிகளாலும் வருமானம் கிடைக்கும். வெளியில் கொடுத்த கடன்கள் தடையில்லாமல் குறித்த காலத்தில் திரும்பக் கிடைக்கும். வீண் செலவுகளைத் தவிர்த்து விடுங்கள். நெடுநாளாக மலச்சிக்கல், வயிற்றுக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் அதிலிருந்து முழுமையாக விடுபடுவர்.

புதிதாக நண்பர்களானவர்களாலும் உதவிகள் கிடைக்கும். நேர்முக மறைமுக எதிரிகளிடமிருந்து விலகி நின்று செயற்படுவீர்கள். அரசாங்கத்திலிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருந்த காரியங்கள் இப்பொழுது நிறைவேறும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். கௌரவம், அந்தஸ்து உயருவதைக் காண்பீர்கள். கடின உழைப்பை மேற்கொள்ள வேண்டிய காலகட்டமாக இருப்பதால் அனைவரிடமும் நடுநிலைமையுடன் பழகுங்கள். உங்களின் ஆலோசனைகள் அனைவராலும் மதிக்கப்படும்.

கைநழுவிப்போன பதவிகள் உங்கள் கையைத் தேடிவரும். சமுதாயத்தில் உடன்பிறந்தோரால் பாராட்டப்படுவர். உற்றார் உறவினர்கள் மீது உங்களது பாசம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்க வாய்ப்புகள் உண்டாகும். கவலைகள் மறையும். சுகவீனங்களும் மறையும். தீய எண்ணங்கள் மனதில் புகாமல் இருக்கும்.

நண்பர்களையும் ஆதரிக்கும் மனப்பான்மை உண்டாகும். அன்னையுடன் நல்ல உறவு தொடரும். சரியான நேரத்தில் உணவெடுத்துக் கொள்வீர்கள். அனைத்துச் செயல்களிலும் தெளிவான போக்கு தென்படும் காலகட்டமாக இது அமைகிறது.

**உத்தியோகஸ்தர்கள்:** அலுவலகத்தில் இருந்து வந்த கெடுபிடிகள் மறைந்து சுமுகமான சூழ்நிலை தென்படும். உழைப்புக்குத் தகுந்த ஊதியமும் கிடைக்கும். உயரதிகாரிகளின் அன்பும் ஆதரவும் கிடைக்கும் வாய்ப்புகள் அதிகம். சக ஊழியர்களிடம் இணக்கமான உறவு மேம்படும். அவர்கள் உங்கள் வேலைச்சுமையை பகிர்ந்து கொள்வர். சிலருக்கு வீடுகட்ட கடன்களும் கிடைக்கும்.

**வியாபாரிகள்:** வாடிக்கையாளர்களிடம் நிதானமாகப் பேசவும். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்ளவும். கடும்போட்டிகளையும் சந்திக்க நேரிடும். எனவே புதிய முதலீடுகளைச் செய்ய வேண்டாம். கூட்டாளிகளும் சாதகமாக நடந்து கொள்வர்.




**அரசியல்வாதிகள்:** அரசு அதிகாரிகளால் நன்மை உண்டாகும். எதிர்கட்சியினரிடமும் உங்கள் மதிப்பு அதிகரிக்கும். எதையும் முன்கூட்டியே அறிந்து கொண்டு அதற்கு தகுந்தாற் போல் நடவடிக்கைகளை மாற்றிக் கொள்வர். செல்வாக்கு உயரும். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றி விடுவீர்கள்.

**கலைத்துறையினர்:** பழைய ஒப்பந்தங்களை முடித்து கொடுத்த பின்னரே புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும். சக கலைஞர்கள் உதவக்கூடிய நிலையில் இருப்பதால் அவர்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும். புதிய கலைப்பயணங்களையும் மேற்கொள்வீர்கள்.

**பெண்கள்:** கணவரிடம் அன்பும் பாசமும் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களை அனுசரித்துச் செல்வர். பணவரவும் சீராகவே இருந்துவரும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருப்பதுடன் ஆன்மீகச் சுற்றுலாவுக்கும் சென்று வருவீர்கள். மேலும் கிடைக்கும் வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவும்.

**மாணவர்கள்:** புத்திக்கூர்மையுடன் செயற்படுவீர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவதற்கு வாய்ப்புண்டாகும். போட்டிகளிலும் பங்கேற்று புகழும் பாராட்டும் பெறுவீர்கள்.

**உத்திராடம் 2, 3, 4 பாதங்கள்:** இந்த ஆண்டு வேலை இல்லாமல் இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் புதிய தொழில் தொடங்குவதற்கு ஏற்ற காலகட்டமிது. பணத்தை விட அதிக உழைப்பின் மூலம் செய்யும் தொழில் அதிக வருவாய் கிடைக்கும்.

**திருவோணம்:** இந்த ஆண்டு தீவிர முயற்சியின் பேரிலேயே அரசிடம் இருந்து தான் கோரிக்கைகள் நிறைவேறும். புதிய ஒப்பந்தங்களால் பொருளாதார லாபம் கிடைக்கும். எதிர்பார்த்திருந்த வெற்றி வாய்ப்பு கிடைக்கும்.

**அவிட்டம் 1, 2 பாதங்கள்:** இந்த ஆண்டு பாராட்டுகளும் விருதுகளும் கிடைக்கும். தொழிலில் சிறப்படைய மிகுந்த முயற்சி தேவை. வழக்கு விவகாரங்கள் சாதகமாக அமையும். கைவிட்டுப் போன சொத்துக்கள் மீண்டும் வந்து சேரும்.

**பரிகாரம்:** சனிதோறும் அருகிலிருக்கும் சிவன் கோவிலுக்குச் சென்று ஸ்ரீபைரவரை வணங்கி வரவும். முடிந்தால் மிளகு விளக்கு போடவும். சனிக்கிழமைதோறும் பெருமாள் கோவிலில் இருக்கும் தாயாருக்கு மல்லிகைப் பூவை அர்ப்பணித்து 3 முறை வலம் வரவும்.

உங்களுக்கு பொன்னான காலம் கனிந்து வரும். கிழக்கு, தெற்கு ஆகிய திசைகள் நன்மை தரும். சந்திரன் - செவ்வாய் - குரு அதிர்ஷ்டமாக இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மூளையில்...

செல்லப்பட்டபோது அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேதப் பரிசோதனையில் மூளையில் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-4,7,60)

## கசிப்பு...

உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டதுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை இடம்பெறுவதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று புதுக்குடியிருப்புப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றினை முற்றுகையிட்டபோது 330 லீற்றர் கோடாவும் 20 லீற்றர் கசிப்பும் கசிப்பு விற்பனைக்காக பயன்படுத்தப்பட்ட பெறுமதியான மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் 15 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் இருவர் தப்பியோடியுள்ளனர். (ம-4,7,299)

## ஜனாதிபதி...

வுள்ளார்.

வவுனியாவில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து வவுனியா நகரசபை மைதானத்தில் 26ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி வருகை தரவுள்ளார். (ம-4,7,250)

## அமெரிக்கா...

"அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை பலனளித்ததாக துணை நிதியமைச்சர் எனக்குத் தெரிவித்தார்," என்று அவர் கூறினார்.

EFF திட்டம் குறித்து IMF உடன் கலந்துரையாடவும் அமெரிக்காவிற்கு இலங்கை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்ட சமீபத்திய பரஸ்பர வரிகள் குறித்து அமெரிக்க அரசாங்கத்துடன் கலந்துரையாடவும் இலங்கைப் பிரதிநிதிகள் அமெரிக்காவிற்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## பெரமுன...

னர்.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட சந்தேகநபர்களுக்குத் தகவல் வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெல்லம்பிட்டியில் உள்ள லக்சந்த செவன அடுக்குமாடிக் குடியிருப்பில் உள்ள தனது உறவினரின் வீட்டில் இருந்தபோது டான் பிரியசாத் நேற்று முன்தினம் இரவு (22) மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த டான் பிரியசாத், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு துப்பாக்கிதாரிகள் வீட்டிற்குள் புகுந்து டான் பிரியசாத்தை சுட்டுக் கொன்றுவிட்டு அப்பகுதியை விட்டுத் தப்பிச் சென்றதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்த பிஸ்டல் ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருப்பது முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ம-7,4)

## ஊழல் அரசிய...

செலவிடும் சவாலை ஜனாதிபதி அனைத்து அமைச்சர்களுக்கும் ஒப்படைத்துள்ளதாகவும் கடந்த கால பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகள் ஊழல் அரசியலின் பாலர் பாடசாலைகளாக இருந்தன என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள எமது 159 பேரும் குடும்ப அதிகாரத்தினாலோ அல்லது பண பலத்தினாலோ தேர்ந்தெடுக் கப்பட்டவர்கள் அல்ல. அவர்களும் உங்களைப் போன்ற சாதாரண மக்கள்.

உங்களிடையே வாழும் மக்கள். அவர்கள் முன்பு போல பாராளுமன்றத்தில் கூச்சலிட்டு சண்டையிடுவதில்லை. பாடசாலைப் பிள்ளைகள் பாராளுமன்றத்தைப் பார்க்க வரும்போது, பிள்ளைகளை அப்புறப்படுத்துமாறு சபாநாயகரிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

எமது அரசாங்க உறுப்பினர்கள் மிகவும் கண்ணியத்துடனும் சட்டத்தை மதிக்கும் தன்மையுடனும் அரசியல் முதிர்ச்சியுடனும் நடந்து கொள்கிறார்கள் என்றார். (ம-7,4)

## கொலைக்...

புலத்சிங்கள பிரதேசத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டு மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கும் தமது அன்றாட வாழ்க்கையை பாதுகாப்பான முறையில் கழிக்கவும் ஏற்ற சூழலை உருவாக்கித் தர வேண்டியது நாட்டை ஆளும் அரசாங்கத்தினது கடமையாகும். தற்போதைய அரசாங்கத்திற்கு இரு தேர்தல்களிலும் பெரும் மக்கள் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. முறைமையில் மாற்றத்தை மக்கள் எதிர்பார்த்தனர்.

இன்று நாட்டில் பயங்கரமான சூழ்நிலை உருவாகி, கொலைக் கலாசாரம் தலைதூக்கியுள்ளது. இந்த வருடம் ஆரம்ப காலப் பகுதிக்குள் மட்டும் அதிக அளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அச்சமின்றி வீடுகளுக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தும் நிலை இன்று காணப்படுகின்றன. வீதிகளில் சுதந்திரமாக நடமாடக்கூட முடியாத நிலையை நாடு எட்டியுள்ளது.

வர்த்தகர்கள், தொழில் வல்லுநர்கள் [illegible] அரசியல்வாதிகள் என சகலருக்கும் துப்பாக்கிச் சூடு நடத்தும் நிலைக்கு நாடு தற்போது வந்துள்ளது. இது தொடர்பில் பாராளுமன்ற சபை அமர்வுகளிலும் வெளியிலும் கேள்வியெழுப்பினால், இது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் அல்ல என அரசாங்கம் தெரிவித்து வருகிறது. நாட்டில் கொலைக் கலாசாரம் தலைதூக்கி வருகின்ற நிலையில், அதனைத் தடுக்க முடியாமல் அரசாங்கம் மௌனம் காத்து இருக்கும்போது, தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பில்லை என எவ்வாறு கூறுவது என்பதில்பிரச்சினை காணப்படுகின்றன.

இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்கள் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் வகுப்புகளை நடத்துவதற்கு கூட முயற்சித்தனர். ஆனபோதிலும் தற்போதைய ஆட்சியாளர்கள் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் ரியூசன் போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சட்டத்தைவிட தற்போது தோட்டா, வாள், கத்தி, வெடிகுண்டு என்பன வென்றுள்ளன. இவ்வாறு ஒரு நாட்டை நடத்த முடியாது. சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினையை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.04.23
சீட்டிழுப்பு இலக்கம் 5810
W 6 0 4 2 2 8
அத சம்பத W 4 2 2 8
சீட்டிழுப்பு இலக்கம் 385
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.04.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1840
M 29 33 74 82 M
Double Chance 85105

மெகா பவர்
திகதி 23/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2158
V 03 21 27 29 34

ஜய
திகதி 2025.04.23
சீட்டிழுப்பு இலக்கம் 078
M 2 6 7 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4052
சீட்டிழுப்பு திகதி 23.04.2025
F 11 16 43 44
F
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.23
சீட்டிழுப்பு இலக்கம் 1119
விருச்சிகம் 02 09 39 47 விருச்சிகம்
41980 37

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.04.2025 வெற்றி வாரம் 518
ஆங்கில எழுத்து J மற்றும் வெற்றி இலக்கம் 6 4 9 3 5 6
74173
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.35,919,299.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2784
சீட்டிழுப்பு திகதி 2025.04.23 தினம் புதன்கிழமை
14 41 49 63 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,689,491.20

சனிதா
திகதி 23.04.2025 வெற்றி வாரம் 4945
03 23 27 28 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,264,719.60
ரூ.100,000/- 91627

ஜயோதா Jayoda
திகதி 2025.04.23 வெற்றி வாரம் 2121
15 34 35 64 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,010,608.80

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4496
சீட்டிழுப்பு திகதி 23.04.2025 தினம் புதன்கிழமை
08 09 15 56 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,142,713.20
237631

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 25 16 30 47 53
1960
23.04.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.572,758,280.00

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2610
சீட்டிழுப்பு திகதி : 2025.04.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,616,561.60
ADA KOTIPATHI
03 25 29 48 H
ரூ.100,000/- 240951


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

உள்ளூராட்சி சபைத் தேர்தல் – 2025



வலி கிழக்கு பிரதேச சபை (கோப்பாய்) வட்டாரம் 21

எமது வட்டாரத்தை முன்மாதிரி கிராமமாக அபிவிருத்தி செய்வதே எமது இலக்கு

பரமேஸ்வரன் குமுதன்
தலைவர் : ஞானபாஸ்கரோதய சங்கம் (GPS)
(4006)

## சிங்களம்

தொழில் புரிபவர்கள், பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுச் சிங்களம், எழுத்துச் சிங்களம், தனியாக, குழுவாக கற்பிக்கப்படும். அனுபவமிக்க, அங்கீகாரம் பெற்ற ஆசிரியரால் நடாத்தப்படுகிறது. எளிதான, சரியான உச்சரிப்புடனான கற்றலுக்கு (1064)

072 486 8480,077 073 6409

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2787)

## பணிப்பெண் தேவை

மாதகலில் அமைந்துள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வீட்டு வேலை மற்றும் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
- தங்கி நின்று பணிபுரிதல் வேண்டும்.
- 45 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
- சம்பளம் 40,000/=

+9607486446
077 030 6881
(1062)

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு


இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்)

"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி





150, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ்.
070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி,
பரந்தன். 021 228 2020
(4000)

Hotline : 071 535 7799/ 071 535 7803

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2785)

076 825 7716 (ஆகாஸ்)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, சுவாட்ஸ்லேனில் 5 அறைகளுடன் தனித் தனி குளியலறைகளுடன் கூடிய மேல்தளத்தில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.
(அலுவலக பாவனைக்கு உகந்தது) (C-2783)

077 148 4540

## கணக்காளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் தனியார் விற்பனை நிலையம் ஒன்றிற்கு கணக்குத்துறையில் அனுபவம் வாய்ந்த கணக்காளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (C-2783)

077 148 4540

## மணமகள் தேவை

1992, கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு உள்ளூர்/ வெளியூர் மணமகள் தேவை.
பதிவிலக்கம் 13705
தொடர்புகளுக்கு :
070 202 2679
(3999)

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

## பரிபூரணம்

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35,000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(C-2789)

021 222 2695, 077 429 0613

## மணமகன் தேவை

1990. doctor, germany இல் வசிக்கும் விவாகரத்தான பெண்ணுக்கு உள்ளூர்/ வெளியூர் மணமகன் தேவை.
பதிவிலக்கம் 17936
தொடர்புகளுக்கு :
070 202 2679
(3999)

## மணமகன் தேவை

2001(23 வயது). london(uk) இல் வசிக்கும் uk citizen பெண்ணுக்கு உள்ளூர்/ வெளியூர் மணமகன் தேவை
பதிவிலக்கம் 18646
தொடர்புகளுக்கு :
070 202 2679
(3999)

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 - 11 - 1943

இறப்பு 22 - 04 - 2025

### வல்லிபுரநாதன் இராஜேஸ்வரி

துன்னாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரநாதன் இராஜேஸ்வரி அவர்கள் (22.04.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வ.சி.வடிவேலு - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரநாதன் (பொலிஸ் பரிசோதகர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற இளையதம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, யோகேஸ்வரி, ஞானலிங்கம், திருலிங்கம் மற்றும் சிவலிங்கம் (கனடா), மங்களேஸ்வரி (கனடா), கணேசலிங்கம் (ஜேர்மனி), சுகுணேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2025) வியாழக்கிழமை மு.ப 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 309 7353
021 205 6322

தகவல் : ஞா.பிரதீபன் (மகன்)
(C-2782)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 18 . 10 . 1942

இறப்பு 25 . 03 . 2025

அமரர்

### நடேசு தவமலர்

தாய் முகம் அறியேன் நான்-எனை
சேய் எனக் கொண்டாய் நீ!

அன்னையை இழந்த பின்பும்-எனை
அள்ளி ஏந்தி மடி சுரந்தாய்!

பாசத்தைத் தவிர உன்னில்- நான்
பார்த்தது எதுவுமில்லை...

என்ன குறை வைத்திட்டாய்- எனக்கு
ஏதுமில்லை என் தாயே...!

எட்டாத்தூரம் நான் வந்தும்
ஏங்கி ஏங்கிப் பேசிட்டாயே...!

பறந்தோடி உனைத்தேடி வரமுன்னே-எனைப்
பார்க்காமல் போனதேன் தாயே...!

காத்திருந்தேன் உனைக்காண என்று- நான்
கதறுவது கேட்கிறதா அம்மா...!

ஆற்றாமல் தேம்புகிறேன்- உன்
ஆத்மா சாந்திக்காய்...!

என்றும்
உன் நினைவில் வாழும் பேரன்– ஜீ.அஜந்தன்(கனடா)
(1031)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org